ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர் மாயாவி
தடாலடி
மனிதப் பேய்
ரூ.5

புத்தகம்



புத்தகமே அறிவுக்கு வித்து
புகழினையே பெற்றுத்தரும் சொத்து
வித்தகனாய் ஆக்குகின்ற அரசன்
வேண்டுவன தருகின்ற விருட்சம்

அறியாமை இருளினையே ஓட்டும்
அணுகாதோர் வருந்திடவே வாட்டும்
சரியான பாதையினைக் காட்டும்
சத்துணவை மூளைக்கு ஊட்டும்

உயர்வுக்கு வழிகாட்டும் கதைகள்
ஒவ்வொன்றும் நீ ஊன்றும் விதைகள்
முயற்சித்தால் அது சிறந்த பாதை
முன்னேற்றம் தருகின்ற கீதை

நூல்தானே ஒளிகாட்டும் விளக்கு
உணராத பேர்களுக்கு இழுக்கு
நாள்தோறும் படித்தாலே இன்பம்
நிச்சயமாய் அவருடனே தங்கும்.

—அருப்புக்கோட்டை செல்வம்.

ராணி காமிக்ஸ் – 447
(மாதம் இருமுறை இதழ்)
GUNA KARUR
பிப்ரவரி 1, 2003.


ஒரு விடுமுறை காலம். முகமூடி வீரரும், டயானாவும் நியூயார்க் போனார்கள்.
இந்தச் சிலையைப் பார்க்கும்போதெல்லாம் மனித குலத்துக்கே விடுதலை கிடைத்தது போல நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்!
இதுபோல வேடிக்கை பார்க்க இன்னும் எவ்வளவோ இருக்கிறது.
திடீர் என்று...
திருடன்... திருடன்...

உதவி...
உதவி...
!!
பாவம், கிழவி.
!
மாயாவி பாய்ந்தார்
ஓடாதே,
நில்.

திருடன் வேகவேகமாக ஓடினான்
?!
விடமாட்டான் போலிருக்கிறதே !
இருவரும் கட்டிப் புரண்டார்கள் !
ஆ...
கிழவியைக் கொல்லப் பார்த்தாயே !

அதற்குள் போலீஸ் வந்தது.
திருடன் எப்படி இருந்தான்?
திடீர் என்று வந்தான். பாட்டியை அடித்துத் தள்ளிவிட்டு, கைப்பையைப் பறித்துப் போய்விட்டான்!

என் கணவர் அவனை விரட்டிப் போயிருக்கிறார். எப்படியும் பிடித்து வந்து விடுவார்!
பொல்லாத திருடர்கள்! இவர்களைப் பிடிக்க முடியாது!

அப்போது மாயாவி, திருடனைப் பிடித்து, அடித்துத் தூக்கி வந்தார்.
அதோ வந்து விட்டார்!

திருடன் பிடிபட்டுவிட்டான்! பாட்டி, போலீசுக்கு வந்து ஒரு புகார் எழுதிக் கொடுங்கள்!
உஊகூம், முடியாது!
?

திருடன் ஓரிரு மாதத்தில் தண்டனை முடிந்து வெளியே வந்துவிடுவான். பிறகு நான் தெருவில் உயிரோடு நடமாட முடியாது!

இப்படித்தான், யாருமே போலீஸ் நிலையத்துக்கு வந்து, புகார் செய்வதில்லை !
மோசமான ஊராக இருக்கிறதே ! என்னோடு காட்டுக்கு வந்துவிடு, டயானா !
அதேநேரம்– டயானாவின் வீட்டில்...
நான் பூங்காவில் உலாவிவிட்டு வருகிறேன் !
பூங்கா இப்போது பாதுகாப்பாக இல்லை. திருடர்களின் அட்டகாசம் அதிகமாகிவிட்டது !
பயப்படாதே ! என்னோடு நாய்க்குட்டியும் வருகிறது !

பெரிய ஆள் போலத் தெரிகிறதே!
பை நிறையப் பணம் இருக்கும்!
திருடர்கள் அவரைச் சூழ்ந்தார்கள்.
நான் யார் என்று இவர்களுக்குத் தெரியாதோ?
உன் பர்சை எடு!
!

எடுக்கிறாயா?
உதை வேண்டுமா?
வாங்கிக்கொள்!
!!!

மணிபர்சை எடு.
ஆ...!

ஆட்கள் வருகிறார்கள்!
ஓடு!
டயானாவின் தந்தை அடிபட்டுக் கிடந்தார்.
!!
லொள்...
லொள்
லொள்...

வெறும் பத்து டாலர்.... பிச்சைக்காரப் பயல்..!
அது என்ன?
அது போலீஸ் கமிஷனர் "பேட்ஜ்." இது எப்படி இருக்கு?
போலீஸ் கமிஷனர் போல இருக்கிறாய்!
மறுநாள்.
முன்னாள் போலீஸ் கமிஷனர் பால்மர், பூங்காவில் தாக்கப்பட்டார்! உயிருக்குப் போராடுகிறார்!!
அப்பா... அப்பா...
அவர் மயக்கத்தில் இருக்கிறார். நீங்கள் கூப்பிடுவது கேட்காது!


போலீஸ் அதிகாரி வந்தார்.
மிஸ்டர் பால்மர் தாக்கப்பட்டதைப் பலரும் பார்த்திருக்கிறார்கள். ஆனால், அடையாளம் சொல்ல யாரும் முன்வரவில்லை!
என்னை அங்கே அழைத்துப் போகிறீர்களா!
இந்த இடத்தில்தான் மிஸ்டர் பால்மர் விழுந்து கிடந்தார்.
நாய்க்குட்டி அவருக்குப் பக்கத்தில் இருந்தது.
லொள்...
லொள்...
லொள்

வழக்கம் போல யாரும் வாக்குமூலம் கொடுக்க முன் வரவில்லை!
எனக்குத் தெரியாது! நான் பார்க்கவில்லை.
என்ன நடந்தது என்றே எனக்குத் தெரியாது!
எல்லோரும் இப்படிச் சொன்னால் திருடனை எப்படிப் பிடிப்பது?


அடுத்த நாள்.
அப்பா! ஆபத்து நீங்கிவிட்டது! நீங்கள் சீக்கிரமே குணமாகிவிடுவீர்கள் என்று டாக்டர் சொன்னார்.
எனது கமிஷனர் பேட்ஜை பறித்துப்போய் விட்டார்கள்!
கவலைப்படாதீர்கள்! நான் கண்டுபிடித்துத் தருகிறேன்!


திருட்டுக் கூட்டத்தைப் பிடித்தால்தான் கமிஷனர் பேட்ஜை மீட்க முடியும்.
நீங்கள் காட்டுக்குத் திரும்ப வேண்டுமே?
இல்லை! முதலில் உன் தந்தையின் பேட்ஜை மீட்க வேண்டும்!
மாயாவி மாலையில் பூங்காவுக்குப் போனார்.
போலீசிடம் பேசத்தான் பயம். என்னிடம் பேசக்கூடும்!
யாரோ திருடர்கள் நேற்று இங்கே ஒராளை அடித்துப் போட்டு விட்டார்களாமே?
அப்படியா? எனக்குத் தெரியாதே!

நீங்கள் என்ன போலீசா?
எனக்கு ஒன்றும் தெரியாது!
மக்கள் இவ்வளவு கோழைகளாக இருக்கிறார்களே!
நமக்கு ஏன் இந்த வம்பு?
ஒரு துப்பும் இல்லாமல், கொள்ளைக்காரர்களை எப்படிப் பிடிப்பது?
மாயாவி, பூங்காவைச் சுற்றி வந்தார்.

இரவில் வருவதுதான் சரி!
மாயாவி இரவில் பூங்காவுக்கு வந்தார்.
யாரது? இரவில் இங்கே தனியாக வருவது ஆபத்து!

ஓ! துணைக்கு நாய் இருக்கிறதா? அப்படியானால் பரவாயில்லை.
அதை நான் மறந்தேவிட்டேனே! நாளை இதை வீட்டில் விட்டுவிட்டு வரவேண்டும்.
அடுத்த நாள் இரவு.
இப்போது இங்கே ஆட்களே வருவதில்லை. அடுத்த பூங்காவுக்குப் போவோம்!


வேறு பூங்காவில்..
எடு உன் மணிபர்சை!
!

நீ அழகாக இருக்கிறாயே! என்னோடு வா!!
!!

திடீர் என்று அங்கே மாயாவி தோன்றினார்!
கும் என்று ஒரு குத்து!
ஆ...!
திருடன் துப்பாக்கியை எடுத்தான்.
ஆ...!

ஏய்!
ஒரே குத்து!
கும்...!
ஆ...
வா, ஓடிவிடுவோம்!
நில்லுங்கள்!

ஏய்!
ஒரே குத்து!
கும்...!
ஆ...
வா, ஓடிவிடுவோம்!
நில்லுங்கள்!

உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன்!
!

உங்கள் உதவி எனக்கு வேண்டும்!
எங்கள் உதவியா? என்ன உதவி? நீ யார்?

இவர்கள் இருவரும் உங்களைத் தாக்கி, கொள்ளையடிக்க முயற்சித்தார்கள். இதுபற்றி போலீசில் புகார் செய்யுங்கள்!
போலீசா? வேண்டவே வேண்டாம்!
நீங்கள் எல்லாம் இப்படிப் பயப்படுவதால்தான் கொள்ளைகள் தொடர்கின்றன!
நாளை உங்களை மீண்டும் தாக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?
உண்மை தான்!

அவர்கள் செத்து விட்டார்களா? அசைவே இல்லையே!
அவர்களின் கன்னத்தில் என்ன மண்டை ஓட்டு முத்திரை?
அது... அது கொள்ளைக் கூட்டத்தின் அடையாளம் போலிருக்கிறது!
நீ யார்? ஏன் முகமூடி அணிந் திருக்கிறாய்?

என்னைப் பற்றி என்ன கவலை? நீங்கள் இங்கே இருங்கள். நான் போய்,போலீசை அழைத்து வருகிறேன்!
போலீசிடம் நீங்களே புகார் செய்யுங்கள்!
முகமூடி ஒரு போலீசை சந்தித்தார்
சார், அங்கே இரண்டு கொள்ளைக்காரர்கள் ஒரு தம்பதியைத் தாக்கிக் கொள்ளை யடிக்க முயற்சித்தார்கள்! உடனே போய்ப் பாருங்கள்!

போலீஸ்காரர் வந்தார்.
ஆமாம். எங்களைத் தாக்கினார்கள்.
இவர்கள்தான் கொள்ளைக் காரர்களா?
பதிலுக்கு நீங்கள் தாக்கினீர்களா?
இல்லை! ஒரு முகமூடி தாக்கினான்
யார் அந்த முகமூடி?
உங்களுக்குத் தகவல் கொடுத்தவர் தான்!

இரு கொள்ளையரும் நீதிமன்றத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.
இவர்கள் உங்களிடம் கொள்ளையடிக்க முயற்சித்தார்களா?
ஆமாம். என் மணிபர்சை எடுத்துக்கொண்டார்கள்.
இதோ இந்த பர்ஸ்தான்!
திருடர்களைப் பிடிக்க உதவிய உங்களைப் பாராட்டுகிறேன்!
நாங்கள் உதவவில்லை. ஒரு முகமூடி மனிதன் வந்து, எங்களுக்கு உதவினார்.
யார் அந்த முகமூடி?
அப்படி யாரையும் நான் பார்க்கவில்லை!
?

மறுநாள் செய்தித்தாளில்...
கணவன் – மனைவியைக் காப்பாற்றிய முகமூடி வீரன்!
யாருங்க அந்த முகமூடி?
தெரியவில்லையே, டயானா!
இன்று இரவும் நீங்கள் வெளியே போகிறீர்களா?
ஆமாம்! அந்த போலீஸ் கமிஷனர் பேட்ஜை கண்டுபிடித்தாக வேண்டுமே!

அன்று இரவு.
பார்பரா! இப்படி இரவிலா குதிரை சவாரி செய்வார்கள்?
பௌர்ணமி நிலா இருக்கிறதே!
நீங்கள் கூட வருகிறீர்களா?
உன்னைத் தனியேவிட எனக்குப் பயமாக இருக்கிறது!

அவர்கள் போய்க்கொண்டிருந்தபோது திடீர் என்று ஒரு குண்டுபாய்ந்தது!
ஓ
ஆ

அவளைப் பிடி !
ஆ...!
ஓ... ஜேம்ஸ் !

பார்பரா சாட்டையை ஓங்கினாள் !
கீழே போடு ! இல்லையென்றால், துப்பாக்கிக் குண்டு உன்னைத் துளைத்து விடும் !!
?!

அப்போது முகமூடி மாயாவி பூங்காவில் சுற்றிக் கொண்டிருந்தார்.
கொள்ளையர் மீது புலி போலப் பாய்ந்தார் !

யாரது?
தெரியலையே!
கும்...!
இங்கே பாரடா!

சுட்டுவிடுவேன்!
கும்...!
!
பார்பரா அவனைச் சாட்டையால் அடித்தாள்!
ஆ...!
!
!
மாயாவி மின்னல் வேகத்தில் செயல்பட்டார்!

ஆ...!

இவன் மனிதன் அல்ல! மனிதன் இவ்வளவு வேகமாகச் சுடமாட்டான்! பேய்!!

கும்...!
ஆ

பயப்படாதீங்க! எல்லாம் காலி!
சரி, நீ யார்?
உங்களுக்கு உதவ வந்தவன்!
லேசான காயந்தான் என்றாலும் டாக்டரிடம் காட்டுங்கள்!
நீ... நீங்கள் யார்?

என்ன தேடுறீங்க?
?
ஒரு பேட்ஜ்! திருட்டுப் போய்விட்டது!!
இவனிடம் இல்லையே! அந்தத் திருடன் இவன் இல்லையா?
சரியான நேரத்தில் வந்து உதவினீர்கள். உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். உங்கள் பெயர் தெரியவில்லையே...
எனக்குக்கூடத்தான் உங்கள் பெயர் தெரியாது!

அவர்கள் முகத்தில் என்ன மண்டை ஓட்டு அடையாளம்?
தெரியவில்லையே!
நாங்கள் கிளம்பலாமா?
முதலில் போலீசுக்குப் போய்ப் புகார் செய்யுங்கள்!
இவர்கள் ஓடிவிடுவார்களே?
கொஞ்ச நேரம் இப்படியேதான் கிடப்பார்கள்!

போலீசில் என்ன சொல்லுவது?
யார் உதவியது என்று கேட்பார்களே?
ஒரு ஆள் வந்து உதவினார் என்று சொல்லுங்கள்!
நல்ல நேரத்தில் வந்து உதவி செய்தார்.
அவருக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்!
ஆளைக் காணோமே!
மாயாவியா? திடீர் என்று மறைந்துவிட்டார்!

மறுநாள் செய்தித்தாளில்—
காதலர்களைக் காப்பாற்றிய மாயாவி! யார் அவன்?
யார் இந்த மாயாவி? உங்களுக்குத் தெரியுமா?
எனக்குக்கூட அவனைப் பார்க்க ஆசை!
அவர் ஓய்வு எடுக்கட்டும். தொல்லை பண்ணாதீர்கள்!
எனது பேட்ஜ் கிடைத்ததா?
எப்படியும் கண்டுபிடித்து விடுவேன்!

மாயாவி ஒவ்வோர் இரவும் ஊர் முழுக்கச் சுற்றினார் !
?!
?
அதே மாயாவி !
தான் சந்தித்த ஒவ்வொரு கொள்ளைக்காரன் முகத்திலும் முத்திரை பதித்தார் !
டும்


செய்தித்தாள்களில் பரபரப்பாக செய்திகள் வெளிவந்தன!
கொள்ளைகள் குறைந்தன!
யார் அந்த மாயாவி?


உன் வீட்டுக்காரர் ஏன் ஒவ்வொரு இராத்திரியும் வெளியே போகிறார்?
ஆஸ்பத்திரிக்குப் போய் அப்பாவைப் பார்த்துவிட்டு வருகிறார்!


மாயாவி யார்? ஊர் முழுக்க இதே கேள்விதான்!
மாயாவியை நேரில் பார்த்தவர்களுடன் இப்போது ஒரு நேரடிப் பேட்டி!
இவர்கள் முகமூடியால் கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றப் பட்டவர்கள்.
நீங்கள் பூங்காவில் இருந்தபோது என்ன நடந்தது?
சிறப்புப் பேட்டி

இரண்டு
கொள்ளைக்காரர்கள்
எங்களைத்
தாக்கினார்கள்...
திடீர் என்று மாயாவி
தோன்றினான்...
!!
கொள்ளைக்காரர்களை
அடித்து வீழ்த்தினான்...
நீங்கள் பயப்
படாதீர்கள்!


மாயாவி எப்படி இருந்தான்?
அவன் மாவீரன்! இரும்பு மனிதன்! துணிச்சலானவன்!
சிங்கம் போல அஞ்சாநெஞ்சம் படைத்தவன்!
மெத்தச் சரி!


நீங்கள் குதிரையில் போய்க்கொண்டிருந்த போது, கொள்ளைக்காரர்கள் வந்தார்கள். பிறகு என்ன நடந்தது?
ஒருவன் என்னைச் சுட்டான்! நான் குதிரையிலிருந்து கீழே விழுந்தேன்!
அப்போது மாயாவி அங்கே மாயமாகத் தோன்றினான்!

கொள்ளையர்களைத் தூக்கிப் பந்தாடினான்!


மின்னல் வேகம்! குத்துகள் இடி முழக்கம்!! முதலில் மாயாவியைப் பார்த்து நாங்கள் பயந்தோம்!
வல்லவன் என்றாலும் நல்லவன்! என் குண்டுக் காயத்துக்குக் கட்டுப் போட்டான்!!

கொள்ளைக்காரர்களிடம் எதையோ தேடினான்!
எங்களைக் காப்பாற்றியபோதுகூட!
என்ன தேடுவதாகச் சொன்னான்?
அவர்களிடம் கொள்ளையடித் தானா?
போலீஸ் கமிஷனர் பேட்ஜ் ஒன்றைத் தேடுவதாகத் தெரிவித்தான்!
உங்களையெல்லாம் காப்பாற்றிய அந்த மாயாவி யார் என்றே தெரியவில்லையே?
சிறப்புப் பேட்டி

கொள்ளைக்காரர்களின் வீடு
மாயமாக வந்து மாயமாக மறையும் மாயாவி!
மாக்ஸ்! நீ டி.வி. பார்க்கவில்லையா? அந்த மாயாவி உன்னைத்தான் தேடுகிறான் என்று நினைக்கிறேன்!
சீட்டைப் போடு!
!

அந்த மாயாவியைக் கண்டுபிடித்துத் தொலைக்க வேண்டும்!
மாயாவி மனிதனா பேயா என்றே தெரிய வில்லையே!

அந்த அடி அடிக்கிறான்!! மனிதப் பேயோ!
பால்மரைப் பார்க்க போலீஸ் அதிகாரிகள் வந்தார்கள்.
இப்போது பரவாயில்லை. என்றாலும் வீட்டுக்குப் போக நாளாகும்.
உங்கள் பேட்ஜை திருடிப் போய்விட்டார்களாமே?
ஓய்வு பெற்ற பின்பும் நான் அதை உயிர்போல வைத்திருந்தேன்!
அந்த மாயாவி யார் என்றே தெரியவில்லையே!

இவர் என் மகள் டயானாவின் கணவர்!
இவர்தான் உங்களுக்குத் துணையா?
பேட்ஜ் கிடைத்தால் உடனே உங்களுக்குத் தகவல் தருகிறோம்!
மன்னிக்க வேண்டும்! பார்வை யாளர் நேரம் முடிந்தது!
நீங்கள் வந்ததற்கு மிகவும் நன்றி! என் பேட்ஜை மீட்க முயற்சி செய்யுங்கள்!

மாயாவியும் பேட்ஜைத்தான் தேடுகிறானாம்! அவனுக்கு எதுக்கு எனது பேட்ஜ்?
போலீஸ் கமிஷனர் பேட்ஜ் என்றால் ஒரு பெருமைதானே?
நேற்று இரவும் நகரில் ஒரு கொள்ளையும் நடக்க வில்லை. அதுக்குக் காரணம் மாயாவிதான். யார் அந்த மாயாவி?
மனிதனா? ஆவியா? யாராக இருந்தாலும் கொள்ளையர்கள் பயந்து அடங்கி விட்டார்கள்!

கேட்டீர்களா? மாயாவியைப் பார்த்து நாம் பயந்துவிட்டோமாம்!
நாம் அல்ல, மாக்ஸ்! நீ! நீதானே அந்த பேட்ஜை வைத்திருக்கிறாய்? உன்னைத்தான் மாயாவி தேடுகிறான்!
என்னடா சொன்ன?
கும்...
தைரியமிருந்தால் மாயாவியுடன் மோதிப் பார்!
மோதத்தான் போறேன்!
மாயாவியை வீழ்த்த ஒரு நல்ல திட்டம் வைத்திருக்கிறேன்! மாயாவியை ஒழித்தால்தான் நாம் தொழில் நடத்த முடியும்!
மாயாவி மனிதனா, பேயா?

பேய்கூட நம்மைப் பார்த்து ஓடும்! ஜிஞ்சர் பேபியைக் கூப்பிடு!
இவள்தான் ஜிஞ்சர் பேபி
இவளை வைத்து மாயாவியைப் பிடிப்பேன்!
ஜோன்ஸ்! நீயும் ஜிஞ்சர் பேபியும் காதல் ஜோடி போல பூங்காவில் உலாவுவீர்கள். நாங்கள் தாக்க வருவோம். உங்களைக் காக்க மாயாவி வருவான்...
வந்ததும், நான் விசில் அடிப்பேன்! எல்லோரும் அவன் மீது பாய்ந்து அடித்துக் கொன்றுவிட வேண்டும்!


அன்று இரவு ஜிஞ்சர் பேபி, ஜோன்ஸ் இருவரும் பூங்காவுக்குப் போனார்கள். கொள்ளையர்கள் பதுங்கியிருந்தார்கள்.
ஜோன்ஸ்! ஏதாவது பேசேன்!
ஆ... ஊ...
மாயாவி வராவிட்டால் என்ன செய்வது?
நாளையும் இதே நாடகந்தான்

அதே நேரம் டயானாவின் வீட்டில்....
இன்றும் நகர உலா கிளம்பிவிட்டீர்களா?
பேட்ஜை மீட்காதவரை என் உலா நிற்காது, டயானா!

எனக்குப் பயமாக இருக்கிறது!
என்ன பயம்? நான் மரணத்தை வென்றவன்!

கொள்ளைக்காரர்கள் வெகுநேரமாகக் காத்திருந்தார்கள்
மாயாவியைக் காணோமே.
அடுத்த காட்சியை அரங்கேற்றுங்கள்!
அப்போது மாயாவி வந்தார்
பலபேர் பதுங்கி யிருக்கிறார்களே, எதுக்காக?
நாடகம் அரங்கேறியது!
உதவி... உதவி...
இன்னும் பலமா கத்து!

நடிப்புப் போலத் தெரியக்கூடாது!
இன்னும் சத்தமா... கத்து
உதவி... உதவி....
ஜிஞ்சர் பேபி அருமையா நடிக்கிறாள்!
வந்தால், மாக்ஸ் விசில் அடிப்பார்!
யாரை ஏமாற்ற இந்த நாடகம்?
உதவி... உதவி...
போய்ப் பார்ப் போம்!
அதோ வந்து விட்டான்.
உய்...

பிடி... அடி...!
உய்...
மாயாவி...
ஆ...!
நாடகம் முடிந்தது! மாக்ஸ் விசில் அடிக்க அவன் கூட்டமே திரண்டு வந்தது!
உய்...
இவர்கள்தான் பேட்ஜ் திருடியவர்களா?
ஆ...

எல்லாம் நாடகம் என்பது இப்போது உறுதியாகி விட்டது!
நாலாபுறமும் கொள்ளையர்கள் சுற்றி வளைத்தார்கள்!
உயிரோடு விடக்கூடாது!
நீதான் கதாநாயகனா?
ஆ...!
செத்த ப்யலே!
ஙும்
அடி... கொல்லு...
வாங்கடா வாங்க!

மாயாவி இடி— மின்னலாக செயல்பட்டார்!
ஆ...!
கொன்றுவிடாதீர்கள்! அவன் மனிதனா, பேயா என்று பார்க்க வேண்டும்!
அகப்பட்டான்! அப்படியே பிடித்துக் கொள்!!
அடிபட்ட பாம்பு போல மாயாவி சீறினார்!
ஆ...
அய்யோ...

மாயாவியின் ஒவ்வொரு அடியும் இடி போல இறங்கியது!
அய்யோ....
அடுத்தவன் யாருடா?
அவனைப் பிடிக்க முடியாது போலிருக்கிறதே!
மாயாவி சரிந்துகொள்ள, அவர் கையில் குண்டு பாய்ந்தது!
ஆ...!

பதிலுக்குப் பதில்!
ஆ...
இவன் மனிதனே அல்ல! பேய்தான்!!
என்னைச் சுட்டுவிட்டு நீ தப்பிவிடலாம் என்று நினைக்கிறாயா?
எங்கே போனாலும் உன்னை விடமாட்டேன்!
அவன் கண்ணில் படாமல் தப்பித்தேன்!


பதுங்கியிருந்த மாயாவி, புலி போலப் பாய்ந்தார்!
ஆ....!
எங்கே கமிஷனர் பேட்ஜ்...?
பேட்ஜ்? எனக்குத் தெரியாது! நான் திருடவில்லை!!
உன் ஆட்களைப் பார்த்தாயா? உனக்கும் இதே கதிதான்! சொல், பேட்ஜ் எங்கே?
இவன் வைத்திருக்கிறான்!

இவனோடு இருந்தவள்தான் அவள் !
நீ இங்கே விழுந்துகிட !
ஆ...!
மாயாவி ஜிஞ்சர் பேபியை விரட்டிப் பிடித்தார் !
எங்கே ஓடுகிறாய்? நில்! பேட்ஜ் எங்கே?
அவன்தான் வைத்திருக்கிறான் !
கடைசியில் பேட்ஜ் கிடைத்துவிட்டது!

நீயும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவள்தானே? வா!
!!
மறுநாள் காலை
?
போலீஸ்
தோட்டத்தைச் சுத்தம் பண்ணும் ஆள் வந்தார்.
ஆ...!

போலீஸ்...
போலீஸ்....
இங்கே
பூங்காவிலே...
!!!!
உடனே போலீஸ்
கார் புறப்பட்டது!
கொள்ளைக்காரர்கள்!

கதவு தட்டும் ஓசை கேட்டது.
யார், நீங்களா?
ஆமாம், டயானா!
அச்சோ! நிறைய இரத்தம் போயிருக்கிறதே!
சாதாரணக் காயந்தான்!
என்ன நடந்தது?
உன் அப்பாவின் பேட்ஜை கண்டுபிடித்து விட்டேன்!

அதே நேரம்...
படுகொலை போலிருக்கிறதே?
யார் செய்திருப்பார்?
யாரும் சாகவில்லை!
இது மாயாவி வேலைதான்! எல்லோர் முகத்திலும் மண்டை ஓட்டு முத்திரை இருக்கிறதே!
மண்டை ஓடு என்றால், மாயாவி பேயாகத்தான் இருப்பான்!
போலீஸ் நிலையத்தில்
நானும் என் காதலனும் பூங்காவில் நிலவு ஒளியில்...
பொய் சொல்லாதே! நேற்று நிலவே கிடையாது— அமாவாசை! உண்மையைச் சொல்!!

அவள் பொய் சொல்லுகிறாள்! அவள் என் கூட்டாளி
இந்த ஆளை நான் பார்த்ததேயில்லை!
செய்தித்தாள்களில் பரபரப்புச் செய்தியாக வெளிவந்தது!
கொள்ளைக் கூட்டம் பிடிபட்டது! போலீஸ் கமிஷனர் பேட்ஜ் மீட்பு!
மாயாவி எங்கே?
மாயாவி, பால்மரிடம் பேட்ஜை ஒப்படைத்தார்.
நீதான் அந்த மாயாவி என்று நினைக்கிறேன்!
கொள்ளைக்கூட்டத் தலைவன் மாக்சுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.
ஜிஞ்சர் பேபிக்கு ஏழாண்டு சிறை தண்டனை!
மாயாவி காட்டுக்குத் திரும்பினார்
நகரில் கொள்ளைகள் குறைந்துவிட்டன. மாயாவியும் இப்போது வருவதில்லை!
முடிந்தது

வியத்தகு விஞ்ஞானி

கலீலியோ

இயற்பியலிலும் வானவியலிலும் அறிஞரான கலீலியோ, "விஞ்ஞானத்தின் தந்தை" எனப் போற்றப்படுகிறார். 1564—ல் இவர் பிறந்தார்.

கலீலியோ ஒருமுறை மாதா கோவிலுக்குப் போனார். அங்கே தொங்கிய விளக்கு, காற்றில் ஆடியது. அது, ஒருபுறத்திலிருந்து மறுபுறம் சென்று திரும்பிவர ஆகும் நேரம் ஒரே அளவாக இருந்ததைக் கண்டார். அந்த அடிப்படையில் ஒரு தத்துவத்தை வெளியிட்டார். இதன்படியே இன்றைய ஊசல் (பெண்டுலம்) கடிகாரம் இயங்குகிறது.

உயரத்திலிருந்து போடப்படும் கனமான பொருள், வேகமாகக் கீழே விழும்; எடை குறைவான பொருள், மெதுவாக விழும் என மக்கள் நம்பினார்கள். அது தவறானது என்றார், கலீலியோ. அதை நிரூபிக்க, பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தில் ஏறி பெரிய—சிறிய இரும்புக் குண்டுகளை ஒரே நேரத்தில் போட்டார். அவை, ஒரே நேரத்தில் கீழே வந்து விழுந்தன.

அன்றைய மக்கள், சூரியன் தான் பூமியைச் சுற்றி வருகிறது என்று நம்பினார்கள். கலீலியோ பல ஆராய்ச்சிகள் செய்து, பூமி தான் சூரியனைச் சுற்றி வருகிறது என்று உறுதிப்படுத்தினார்.

அக்காலத்தவர்கள் கலீலியோவின் கருத்துகளைக் கடுமையாக எதிர்த்தார்கள். அவரைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினார்கள். கடைசியில் பார்வையிழந்த கலீலியோ, 1642—ல் இறந்தார். ஆனாலும் தன் கண்டுபிடிப்புகளால், கலீலியோ காலம்கடந்தும் வாழ்கிறார்.

எழுத்துச் சக்கரம்



உங்கள் பொது அறிவை இந்தப் புதுமையான சொல் விளையாட்டு மூலம் வளர்க்கலாம். சக்கரத்தின் கடையாணி போல், எல்லாச் சொற்களுக்கும் நடு எழுத்து "ச்" தான். ஒவ்வொன்றும் ஏழு எழுத்து கொண்டவை. முதல் எழுத்து, நடு எழுத்து, கடைசி எழுத்துகள் உள்ளன. அவற்றைக் கொண்டு இந்தச் சக்கரத்தை நிரப்ப முயலுங்கள்.

(விடை: 72-ம் பக்கம்)

எங்கள் வீட்டு வாலு!

உங்கள் குழந்தைகளின் படங்களை அனுப்புங்கள். ராணி காமிக்சில் வெளியிடப்படும். வண்ணப்படமாக இருக்க வேண்டும். அஞ்சலட்டை அளவு இருந்தால் போதும். குழந்தையின் பெயர், வயது, பெற்றோர் பெயர், ஊர் ஆகிய விவரங்களைக் குறிப்பிடுங்கள். படங்களை அனுப்ப வேண்டிய முகவரி: **குழந்தைப் படம், "ராணி காமிக்ஸ்", சென்னை–600 007.**

பெயர்: த. தோஷ்ஷினி, (வயது 3).
பெற்றோர்: தமிழ் அரசன் – உதயசந்திரகலா, பம்மல், சென்னை.

பெயர்: சூரியா.
பெற்றோர்: கணேசன் – கௌரி
தஞ்சாவூர்.

நரம்புகள் புடைத்த உடல்; காற்றை வெட்டும் கரங்கள்; கத்திக் கண்கள்; மின்னல் வேகம்; அதிரடிப் பாய்ச்சல்— இத்தனைக்கும் உரியவர்

புயல் புரூஸ்—லீ

புரூஸ்-லீ.

"குங்பூ" என்ற தற்காப்புக் கலையைக் கற்று, தன் சண்டைக் காட்சிகளால் குறுகிய காலத்தில் உலகப் புகழ் பெற்றவர்; லீ.

1940 நவம்பர் 27-ல் அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோவில் புரூஸ்லீ பிறந்தார்.

1941-ம் ஆண்டு, பெற்றோருடன் ஆங்காங் நாட்டுக்கு வந்தார். படங்களில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார்.

சண்டைக் காட்சிகளில் மின்னிய அவருக்குப் பின்னால் ஒரு கதை உண்டு. 1953-ல் ஆங்காங் தெருவில் அவர் நடந்து சென்று கொண்டிருந் தார். சிலர், அவரை வம்புக்கு இழுத்தார் கள். அந்தச் சண்டை யில் அவர் தோற்றுப் போனார். ஆனால், அவர் மனம் சோர்ந்துவிட வில்லை. சண்டையில் வல்லமை பெற உறுதி யெடுத்தார். "குங்பூ" தற்காப்புக் கலையைப் பயின்றார். அதில் மாபெரும் வீரரானார். அவர் நடிப்பில் 1971 ல் 'பிஸ்ட் ஆப் பியுரி' என்ற பட்டம்

ளிவந்தது.

அதில் சண்டைக் காட்சிகள் அவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தன. அடுத்து, 'என்டர் த டிராகன்' என்ற படத்தில் நடித்தார்.

படப்பிடிப்பு முடிந்து, படம் வெளிவர ஒரு மாதம் இருந்தது. அப்போது 20-7-1973ல் புரூஸ்-லீ திடீரென இறந்தார். அவருக்கு வயது 32தான். அவர் மரணம், மர்மமாகவே உள்ளது.

அவர் இறந்தபின் வெளிவந்த "என்டர் த டிராகன்" படம், உலகம் முழுவதும் வெளியாகி பிரமாண்ட வெற்றி பெற்றது.

குறுகிய காலம் வாழ்ந்தாலும் புரூஸ்-லீயின் புகழ், இன்னும் விரிந்தபடியே உள்ளது.

எழுத்துச் சக்கரம் விடை:-

1. முத்துச்சிப்பி
2. பள்ளிச்சீருடை
3. ஊட்டச்சத்து
4. பட்டுச்சட்டை
5. குத்துச்சண்டை
6. பயணச்சீட்டு
7. மாட்டுச்சந்தை
8. காவடிச்சிந்து

நாடுகளின் விடுதலை நாள்

உலகின் முக்கிய நாடுகளும், அவை சுந்திரம் பெற்ற நாளும் வருமாறு:-

ஆஸ்திரேலியா, பர்மா – ஜனவரி 4
இலங்கை – பிப்ரவரி 4
கிரீஸ் – மார்ச் 25
இத்தாலி – மார்ச் 26
இஸ்ரேல் – ஏப்ரல் 3
ஸ்பெயின் – ஏப்ரல் 10
ஜப்பான் – ஏப்ரல் 29
போலந்து – மே 3
நார்வே – மே 17
தாய்லாந்து – ஜூன் 24
கனடா – ஜூலை 1
பிலிப்பைன்ஸ் – ஜூலை 3
அமெரிக்கா,
ஆப்கானிஸ்தானம் – ஜூலை 4
பிரான்ஸ் – ஜூலை 14
பெல்ஜியம் – ஜூலை 21
பாகிஸ்தான் – ஆகஸ்டு 14
இந்தியா – ஆகஸ்டு 15
இந்தோனேசியா – ஆகஸ்டு 17
மெக்சிகோ – செப்டம்பர் 16
போர்ச்சுகல் – அக்டோபர். 5
சீனா – அக்டோபர் 10
துருக்கி – நவம்பர் 1
பின்லாந்து – டிசம்பர் 6

விடுகதைகள்

1. அப்பன் முள்மேனியன்
ஆத்தாள் சடைச்சி
பிள்ளைகளோ
சர்க்கரைக்கட்டி!

அது என்ன?

2. எந்தச் சுமையும் தாங்கும்!
குதிரையோ
யானையோ அல்ல!

அது என்ன?

3. பட்டுமேல்
பட்டுடுத்திய பெண்!
அவிழ்த்தால்
எதுவுமில்லை!

அவள் யார்?

4. மணம் தருவான்...
நல்ல சுவை தருவான்...
ஆனாலும்
ஒதுக்கித்தள்ளப்படுவான்!

அவன் யார்?

5. செம்பு நிறைய கெம்பு!

அது என்ன?

6. எப்போதும்
சுறுசுறுப்பாய் இருப்பான்;
தூங்கமாட்டான்!
ஆனால், மனிதன் அல்ல!

அவன் யார்?

விடுகதை விடைகள்:-

1. பலாப்பழம்
2. திண்ணை
3. வெங்காயம்
4. கறிவேப்பிலை
5. மாதுளம்பழம்
6. தேனீ

உப்பு ஏன்?

கடல் நீர் உப்பாக இருக்கிறது. அது ஏன் தெரியுமா?

நிலத்தில் விழுகிற மழை நீர் மண்ணில் உள்ள உப்புகளைக் கரைத்தெடுத்துக் கடலில் கொண்டுபோய் சேர்க்கிறது. கடலிலிருந்து வெறும் நீரை மட்டுமே சூரிய வெப்பம் ஆவியாக்கி வெளியேற்றுகிறது. உப்பு அப்படியே இருக்கிறது. இதனால் கடல் நீரில் உப்புச் சத்து அதிகமாகிக்கொண்டே வருகிறது.

...ன்னது' என்று எதுவும் உண்டோ?

சின்னச் சின்ன செயல்களாகத்தான் வாழ்க்கை உருண்டோடுகிறது. சின்னச் சின்ன மணித்துளிகளாகத்தான் நாளும் பொழுதும் செலவழிகிறது.

சின்னச் சின்ன முயற்சிகளால்தான் வெற்றி பிறக்கிறது. சின்னச் சின்ன பிழைகளால்தான் பேரிழப்பு நேர்கிறது.

கோவலனைக் 'கொண்டு வா' என்று சொல்வதற்குப் பதிலாக பாண்டிய மன்னன் 'கொன்று வா' என்று சொல்லிவிட்டான். விளைவு— உங்களுக்குத் தெரிந்ததுதானே!



நச்சுப் புட்டியில் ஒட்டியிருந்த தாள் பிரிந்து வந்துவிட்டது என அதைத் தூர எறியலாமா? அடையாளமில்லாத அதனை யாரேனும் தவறாகப் பயன்படுத்தி விட்டால்...?

ஆம்புலன்ஸ் கேட்டு தொலைபேசியில் பேசுகிறார், ஒரு பெண். எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டவர், தெருவின் பெயரைச் சரியாகக் குறிக்கத் தவறிவிடுகிறார். ஆம்புலன்ஸ், எல்லாம் முடிந்தபின் நேரம் கழித்துப் போய்ச் சேர்ந்தது. பயனென்ன?

ரெயில் வண்டியைப் பிடிக்க

அவசரமாய் 'ஆட்டோ' பிடிக்கிறார், பயணி. பாதி வழி சென்றதும், 'பெட்ரோல் தீர்ந்துவிட்டது. போட்டுக்கொள்கிறேன்' என வரிசையில் வண்டியை நிறுத்துகிறார், டிரைவர். அவருக்குச் சின்ன தவறாகப் படலாம். ஆனால், பயணிக்கு?

அன்றையப் பாடத்தை அன்றே படித்தால் அறிவு கூடும். இன்று ஒருநாள்தானே படிக்கவில்லை என்று ஒவ்வொரு நாளாகக் கடத்திச் செல்வது அழகா? தேர்வு நெருங்கியதும் அவசரமாய்க் கடைசியில் படித்தால் அதிக மதிப்பெண் எடுக்க முடியுமா?

மிதிவண்டியில் ஒரேயொரு ஆணிதான் குத்திவிட்டது என அமைதியாய் இருக்க முடியுமா? சிறிது நேரத்தில் காற்று முழுவதும் போய் வண்டியோட்ட முடியாதல்லவா?

சின்ன விஷயந்தானே எனச் சிதறிக் கிடக்கும் புத்தகங்களை அப்படியே விட்டுவிட்டால் சில நாளில் வீடே அலங்கோலமாகி விடும்.

சின்ன காயம் என கவனிக்காமல் விட்டுவிட்டு பின்னால் நொந்துகொள்பவர்களும் உண்டு.

ஒரு ஓட்டத்தால் கிரிக்கெட் போட்டியில் தோற்க நேர்கிறதல்லவா? சிறிது என்று எதைச் சொல்ல?

விநாடி அலட்சியத்தால் பெரும் விபத்துகள் நேர்ந்திருக்கின்றன.

சின்ன விஷயம் என்று எதையும் அலட்சியப்படுத்தாதீர்கள். சிறு சிறு செயல்களில் காட்டும் செம்மையே மகிழ்ச்சிக்கு வித்தாகிறது. சிறுசேமிப்பு, பேருதவியாய் இருப்பது நீங்கள் அறிந்தது தானே! எனவே, சிறிதையும் பெரிதாய்ப் போற்றுவோம்.

—கீழைக்காற்று.

ராணி காமிக்ஸ்

சந்தா விவரம்

ஆறு மாதம்	ரூ. 65
ஒரு ஆண்டு	ரூ. 120
இரண்டு ஆண்டு	ரூ. 225

வெளிநாடுகள்

ஆறு மாதம்	ரூ. 400
ஒரு ஆண்டு	ரூ. 700

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

சிலந்தியின் கதை



சிலந்தி வலை மென்மையானது. சிலந்தியின் வயிற்றிலுள்ள சுரப்பிகள் ஒரு வகை திரவத்தைச் சுரக்கிறது. சிலந்தி, இந்தத் திரவத்தைக் கொண்டு மிக மெல்லிய இழையை நூற்கிறது. வலை பின்னுகிறது. இது காற்றில் நன்கு இறுகிக் கெட்டியாகிவிடும்.

சிலந்தி வலை,இயற்கை விந்தைகளுள் ஒன்றாகும். பெரும்பாலும் பெண் சிலந்திதான் வலை பின்னும். வலை பின்னியதும் அதன் நடுவிலோ, அடியிலோ காத்திருக்கும்; வலையிலிருந்து, தான் இருக்கும் இடத்திற்கு ஓர் இணைப்பு நூலை அமைத்து, தன் காலின் நுனியை அதில் கொக்கி போல் வைத்திருக்கும்.

வலையில் ஏதேனும் பூச்சி விழுந்தால் அதில் அதிர்வு ஏற்படும். அதைக் கொண்டு பூச்சி விழுந்துள்ளதை உணர்ந்து சிலந்தி வேகமாக அதைப் பிடித்துவிடும்.

வலையிலுள்ள நூல், பசை போல் இருப்பதால் பூச்சி அதில் நன்றாக ஒட்டிக்கொள்ளும். எல்லாச் சிலந்திகளுக்கும் ஒருவித நஞ்சு உண்டு. தனக்கு இரையாகு பூச்சியைச் சிலந்தி நஞ்சேற்றி கொன்றுவிடும். சில வகை சிலந்திகளின் நஞ்சு ஆபத்தானது. கொடிய பூச்சி ஏதேனும் வலையி சிக்கினால் சிலந்தியே வலையை அறுத்து அதை விடுவித்துவிடும்.

சில வகைச் சிலந்திகள் வலை பின்னுவதேயில்லை. அவை பூச்சிகளை வேகமாகத் துரத்தி சென்று பிடித்து உண்ணும்

சிலந்திகளுக்கு எட்டுக் கால்கள் உண்டு. வலை பின்னும் சிலந்திகளுக்குப் பார்வை குறைவு.

சிலந்திகளால் திடப்பொருளை உண்ண முடியாது. இவை தனக்கு இரையாகும் பூச்சிகளின் உடலில் ஒரு திரவத்தைச் செலுத்தி பிறகு அவற்றின் இரத்தத்தையோ சாற்றையோ உறிஞ்சுகிறது.

சிலந்திகளால் உணவின்றிப் பல மாதங்கள் வாழ முடியும்.

சிலந்தியின் தோல் அவ்வப்போது உரிந்துவிடும். இவற்றின் கால்கள் முறிந்துவிட்டால் அவை மீண்டும் வளரும். ஆண் சிலந்தியைவிடப் பெண் சிலந்தி பெரியது. பெண் சிலந்திக்குப் பசித்தால் ஆண் சிலந்தியையே தின்றுவிடும்.

சில வகைச் சிலந்திகள் ஒன்றிரண்டு முட்டைகளே இடும்; நூற்றுக்கணக்கான முட்டைகள் இடும் சிலந்திகளும் உண்டு. குஞ்சுகள் சில நாள் வளர்ந்ததும் தம் நூலைக் காற்றில்விட்டு அதன் உதவியால் தாயின் வலையை விட்டுப் பிரிந்து சென்றுவிடும்.

> **நம்பிக்கை உறுதியா இருக்கும்போது பிரார்த்தனை நீண்டதாக இருக்கத் தேவையில்லை.**
>
> —முதுமொழி.

அரிய வகைச் சிலந்திகள் நீருக்கடியிலும் வாழும். சிலந்திகளில் சுமார் 40 ஆயிரம் வகைகள் உள்ளன. சில வகை 6 செ.மீ. மீளமுள்ளவை. ஒரு மி.மீ. அளவேயுள்ள சிலந்திகளும் உண்டு.

சிலந்திகள் பல நிறங்களிலும் காணப்படும். பொதுவாகச் சிலந்திகள் ஒரு ஆண்டு வாழும். பெரிய வகை சிலந்திகள் 15 ஆண்டு வரை வாழும். ★

மழை நீரைக் குடிக்கலாமா?

மழை நீர் சுத்தமானதா? அதைக் குடிக்கலாமா என்ற சந்தேகம் எழும். நெடுநாள் மழையில்லாமல் இருந்து பிறகு முதலில் பெய்யும் மழை நீரில் காற்றில் மிதக்கும் அசுத்தங்கள் கலந்திருக்கும். அதைக் குடிக்கக் கூடாது. தொடர்ந்து மழை பொழியும்போது மழை நீரில் இவ்வித அசுத்தக் கலப்பு குறைவாகவே இருக்கும். அப்போது குடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், சுத்தமான முறையில் சேகரிக்கப்பட்ட மழை நீரை வடிகட்டி நன்கு காய்ச்சிக் குடிக்கலாம்.

1. சாக்ரடீஸ்

2. இராமகிருஷ்ணர்

3. சுப்ரமணிய பாரதி

4. அரிஸ்டாட்டில்

கண்டுபிடியுங்கள்

புகழ்பெற்ற குரு—சீடர்களின் படங்கள் இடம்மாறி உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்துச் சரியாகச் சேருங்கள்.

அ. விவேகானந்தர்

ஆ. மகா அலெக்சாந்தர்

இ. பிளேட்டோ

ஈ.பாரதிதாசன்

விடைகள்: 80-ம் பக்கம்

விலை உயர்ந்த கல்

தன் நாட்டிற்கு வருகை தந்த துறவி ஒருவரை அரசன் சிறப்பாக வரவேற்றான்.

பெருமையைக் காட்ட நினைத்த அவன், பளபளக்கும் வைரக் கல் ஒன்றை அவரிடம் காட்டினான்.

"துறவியாரே! இதன் மதிப்பு பல லட்சம் பொற்காசுகள். இதுபோன்ற வைரக் கல் வேறு எந்த நாட்டு அரசனிடமும் இல்லை" என்றான்.

"அரசே! இதன் மதிப்பு பல லட்சம் பொற்காசுகள் என்றீர். ஒரு நாட்டின் மதிப்பிற்கு ஈடாக

இதைச் சொல்லலாம் என்றீர். இவ்வளவு மதிப்புடைய இந்தக் கல், ஆண்டிற்கு எவ்வளவு வருமானம் தருகிறது?"

'துறவி அறியாமையால் இப்படிக் கேள்வி கேட்கிறாரே' என்று நினைத்தான் அரசன்.

"துறவியாரே! இதனால் எந்த வருவாயும் இல்லை. இதைப் பாதுகாப்பதற்காக நிறைய வீரர்களைக் காவலுக்கு வைத்திருக்கிறேன். ஆண்டுக்கு ஆயிரம் பொற்காசுகளுக்கு மேல் இதற்கே செலவாகிறது."

"அரசே! இதைவிட விலை உயர்ந்த கல் ஒன்றை உம் நாட்டிலேயே பார்த்தேன். என்னுடன் வந்தால் காட்டுகிறேன்."

துறவியுடன் அரசனும் புறப்பட்டான்.

நகரத்திற்கு வெளியே இருந்த சிறு குடிசைக்குள் துறவி நுழைந்தார்.

அங்கே கிழவி ஒருத்தி, கல் இயந்திரத்தில் மாவு அரைத்துக் கொண்டிருந்தாள்.

கண்டுபிடியுங்கள் விடை:–

(1) – (இ)

(2) – (அ)

(3) – (ஈ)

(4) – (ஆ)

அந்த இயந்திரத்தைக் காட்டிய துறவி "அரசே! உம் வைரக் கல்லைக் காப்பாற்ற நீர் செலவு செய்கிறீர். இந்த இயந்திரக் கல்லோ இடைவிடாது உழைத்து இந்தக் குடும்பத்தையே காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. இதுவே விலை உயர்ந்த கல் என்பதை ஒப்புக்கொள்வீர்" என்றார்.

இதைக் கேட்ட அரசனின் தற்பெருமை நீங்கியது.

–பேராசிரியர் எ. சோதி, புதுவை.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

"ராணி காமிக்ஸ்" படித்துவிட்டு, வாசகர்கள் தங்கள் கருத்துகளை எழுதி அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர், "ராணி காமிக்ஸ்", சென்னை—600 007.

புத்தாண்டு அன்று புதுமையாக வந்த விண்டிரிக், என் மனதில் சாகசம் செய்தார்.

வீ. சுதர்சன், ராயணம்பட்டி.

தொலைக்காட்சி கார்ட்டூனில் பார்த்த விண்டிரிக்கின் சாகசங்களைப் புத்தகத்திலும் படிக்கலாம்; அதுவும் தமிழில் படிக்கலாம் என்று நீங்கள் வெளியிடுவது மிக நன்றாக உள்ளது. சிறுகதையும், துணுக்குகளும் ரசிக்கும்படி இருந்தன. விவேகானந்தரின் எதையும் கண்டு அஞ்சாத நெஞ்சுறுதியை நாமும் கடைபிடிக்க வேண்டும் என்பதை அறிந்துகொண்டேன்.

—வெ. கலிவரதன், புதுச்சேரி.

நான் "மின்னல் தாக்குதல்" படித்தேன். அதில் விண்டிரிக் சாகசம் அபாரம். மேலும் சிறுகதை—துணுக்குகள் மிகவும் பிடித்திருந்தது. நீங்கள் ஏன் இப்பொழுது அக்னி புத்ரா கதை வெளியிடுவது இல்லை?

—த. ராமச்சந்திரன், மன்மலை.

விண்டிரிக் சாகசத்தில் "மின்னல் தாக்குதல்" கலர் காமிக்ஸ் சூப்பர். "எழுத்துச் சக்கரம்" மூளைக்கு வேலையளிக்கிறது. ஒவ்வொரு முறையும் வெளிவரும் தலைவர்களின் வரலாறு அருமை. அவற்றை நான் சேமிக்கத் தொடங்கி விட்டேன்.

த. கார்த்திக் வெங்கடேஷ்,
மின்னப்பாளையம்.

நீங்களும் எழுத்தாளர் ஆகலாம்!

பல சிறுவர்— சிறுமிகளுக்கும் எழுதும் ஆர்வம் இருக்கிறது. அவர்களை ஊக்கப்படுத்த "ராணி காமிக்ஸ்" முன் வந்திருக்கிறது!

சிறுவர்— சிறுமிகள் சிறுகதை, பாட்டு, சிரிப்பு, துணுக்குகள் எழுதி அனுப்பலாம். ("ராணி காமிக்ஸ்" ஒரு பக்கத்துள் இருக்க வேண்டும்.) வெளியிடப்படும் படைப்புகளுக்கு அன்பளிப்பு உண்டு

அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர், "ராணி காமிக்ஸ்", சென்னை–600 007.

அபூர்வ பாம்பு

படத்தில் நீங்கள் பார்ப்பது அபூர்வ இரட்டைத் தலை பாம்பு. மத்திய தரைக்கடல் பகுதித் தீவுகளில் அதிகம் காணப்படும் இந்த வகைப் பாம்புகள் 60 முதல் 70 சென்டிமீட்டர் நீளம் வரை வளரும்! இரட்டைத் தலையாக இருந்தாலும் இந்தப் பாம்பின் நஞ்சு, மனிதர்களைக் கொல்லாது என்பது ஆறுதலான செய்தி!

Regd.with the Registrar of New
for India under No. 42576/84 – ISSN

82

தினத

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
★ புராண படக்கதை
★ துப்பறியும் படக்கதை
★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
★ சிறுகதைகள்
★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்